சர்வதேச
கூட்டுறவு ஆண்டு
2025
நல்லுலகை
கட்டமைக்கும் கூட்டுறவு

# கூட்டுறவுத்துறை





## 4 ஆண்டு சாதனைகள்

2021-2025



# கூட்டுறவுத் துறை
## நான்கு ஆண்டு சாதனைகள்



முத்தமிழறிஞர், தமிழினத் தலைவர், கலைஞர் அவர்களின் வழியில், தமிழன் தன்மான உணர்வோடு தலைநிமிர்ந்து வாழ தன்னலமற்று அல்லும் பகலும் அயராது உழைத்துவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கூட்டுறவுத் துறையின் மூலம் பல்வேறு நலத் திட்டங்களை சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் விவசாயிகள், ஏழை, எளிய மக்களுக்கு பல்வேறு கடன் உதவிகள், பொது நகைக் கடன் தள்ளுபடி, சுயஉதவிக் குழுக் கடன் தள்ளுபடி, பண்ணை சாரா கடன்களுக்கு சிறப்புக் கடன் தீர்வுத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி ஏழை, எளிய மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கு வழி ஏற்படுத்தி வருகிறார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ், கூட்டுறவுத்துறையின் அமைச்சராக ஏழை, எளிய அடித்தட்டு மக்களுக்கு சேவை செய்த வகையில் துறை சார்ந்த நான்கு ஆண்டு சாதனைகளை வெளியிடுவதில், மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

**கேஆர். பெரியகருப்பன்**
**கூட்டுறவுத் துறை அமைச்சர்**




மாண்புமிகு ஒன்றிய
கூட்டுறவுத்துறை அமைச்சர்
திரு. அமித்ஷா
அவர்களிடமிருந்து
தேசிய அளவில் சிறந்த
மாநிலக் கூட்டுறவு
வங்கிக்கான விருதை
மாண்புமிகு தமிழ்நாடு
கூட்டுறவுத்துறை அமைச்சர்
திரு. கேஆர்.பெரியகருப்பன்
அவர்கள் பெற்றார்.




தேசிய அளவில் சிறந்த வங்கிகளுக்காகப் பெற்ற விருதுகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் காண்பித்து வாழ்த்து பெற்றார்.




கூட்டுறவின்
நோக்கங்களையும்
செயல்பாடுகளையும்
விளம்பரப்படுத்தி
கூட்டுறவு கல்வி
மற்றும் பயிற்சி
அளித்து கூட்டுறவு
அமைப்புக்கு
சேவகனாக இருக்கும்
தமிழ்நாடு கூட்டுறவு
ஒன்றியம்

# இந்தியாவில் முதன்முதலில் துவங்கப்பட்ட திரூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கம்





GOVERNMENT OF MADRAS.

REVENUE DEPARTMENT.

Read—the following Proceedings of the Board of Revenue (Revenue Settlement, Land Records and Agriculture), Mis. No. 4849, dated 9th September 1904 :—

The Hon'ble Mr. A. E. Castlestuart Stuart, I.C.S.,

Commissioner of Revenue Settlement and Director of the Department of Land Records and Agriculture.

*Read*—the following letter from P. RAJAGOPALA CHARI, Esq., Registrar of Co-operative Credit Societies, to the Secretary to the Commissioner of Revenue Settlement and Director of the Department of Land Records and Agriculture, dated 30th August 1904, Ref. on C. No. 22 :—

I have the honour to report that a rural Co-operative Credit Society has been formed at the Tirur village in the Tiruvallúr taluk of the Chingleput district. A copy of the bye-laws of the society is enclosed for the perusal of the Board.

2. In the exercise of the powers vested in me under section 6, sub-section (2) of the Co-operative Credit Societies Act, I am registering the society as I have satisfied myself that the members are mainly agriculturists and that the bye-laws are suitable.

3. There is, however, one point in regard to which the sanction of Government is necessary. Under section 7, clause (*a*) of the Act the liability of the members of a rural society shall, save with the special sanction of the local Government, be unlimited. In the case of the Tirur society, it is provided that the liability of the members shall be limited to the share capital subscribed by them. The organisers of the society (including its President, Rao Bahadur M. Audinarayana Iyah Garu, retired Deputy Commissioner of Revenue Settlement) inform me that while they are quite willing to organise and work a Co-operative Credit Society for the benefit of the poorer people of the villages comprised in the group they are not prepared to face an unlimited liability in the matter. I consider their position a reasonable one, and I therefore recommend that Government be moved to sanction the provision that the liability of the members shall be limited to the share capital subscribed by them.

4. I am reporting to the Collector of Chingleput the fact that a rural Co-operative Credit Society has been started in the Tirur village and I am also sending him a copy of the bye-laws for his perusal.

Enclosure.

*Bye-laws of the "Tirur Rural Co-operative Credit Society (Limited)," passed at a general meeting of the members held on Sunday, the 21st August 1904, at the Tirur village.*

*Name, address and organisation.*

1. The society shall be called "the Tirur Rural Co-operative Credit Society (Limited)."

2. Its address shall be the Tirur village in the Tiruvallúr taluk of the Chingleput district.




2025ஆம் ஆண்டிற்கான பொங்கல் பரிசு தொகுப்பு விநியோகத்தை சைதாப்பேட்டை நியாயவிலைக்கடையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார். ஆண்டுதோறும் பொங்கல் பரிசு தொகுப்பு சுமார் 2 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 4 ஆண்டுகளில் ரூ.6042.67 கோடி செலவில் பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கப்பட்டுள்ளது.




விவேகானந்தபுரம் நியாவிலைக் கடையில் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் 2025–ஆம் ஆண்டிற்கான பொங்கல் பரிசுத் தொகுப்பு விநியோகத்தை தொடங்கி வைத்தார்.



கூட்டுறவு அங்காடிகள் மூலம் தமிழ்நாடு முழுவதும் "கூட்டுறவுப் பொங்கல்" என்ற பெயரில் மலிவு விலையில் 76,426 மளிகைத் தொகுப்புகள் ரூ.2.54 கோடி அளவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.






மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பூங்காநகர் மொத்த விற்பனை பண்டகசாலை நடத்தும் ஐம்புலிங்கம் நெடுஞ்சாலை நியாயவிலைக்கடை கட்டடத்தை 04.11.2024 அன்று திறந்து வைத்தார். கடந்த 4 ஆண்டுகளில் 1536 முழுநேர கடைகள் மற்றும் 573 பகுதிநேர கடைகள் என மொத்தம் 2109 நியாயவிலைக்கடைகளுக்கு புதியக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.


எடையாளர்






**திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கம் நடத்தும் ஜானி பாஷா தெருவில்**
**உள்ள நியாயவிலைக் கடையின் புதிய கட்டடத்தை**
**மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.**






அத்தியாவசியப் பொருட்களின் தரத்தை பாதுகாக்கவும் குடும்ப அட்டைதாரர்களுக்கான சேவையை மேம்படுத்தவும் 4 ஆண்டுகளில் 5481 நியாயவிலைக் கடைகள் பொலிவூட்டப்பட்டுள்ளன. 10,661 கடைகளில் மின்னணு பணபரிவர்த்தனை வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. 12,208 கடைகளுக்கு ISO தரச் சான்றுகள் பெறப்பட்டுள்ளது.




**தரமான மருந்துகளைக் குறைவான விலையில் மக்களுக்கு விற்பனை செய்ய 1000 முதல்வர் மருந்தகங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 24.02.2025 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இதுவரை சுமார் 3.50 இலட்சம் நபர்கள் மிகக் குறைந்த விலையில் மருந்துகளை வாங்கிப் பயனடைந்துள்ளனர்.**



தேனாம்பேட்டை முதல்வர் மருந்தகத்தில் மாண்புமிகு
தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் 24.02.2025 அன்று
மருந்து விற்பனையைத் தொடங்கி வைத்தார்.





வேளாண் பெருமக்களுக்கு பயிர்க் கடன் மற்றும்
கால்நடைப் பராமரிப்புக்காக வட்டியில்லாக் கடனை
தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள்
வாயிலாக அரசு வழங்கி வருகின்றது.
கடந்த 4 ஆண்டுகளில் 81,26,420 விவசாயிகளுக்கு
ரூ.62,352 கோடி வழங்கப்பட்டுள்ளது.



கூட்டுறவு நிறுவனங்கள் மூலம்
4 ஆண்டுகளில் சுமார் 2 லட்சம்
மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு
ரூ 11,627 கோடி
கடன் வழங்கப்பட்டுள்ளது



# கொங்கணாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் நவீனமயமாக்கல்




4 ஆண்டுகளில் 500 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் நவீனமயமாக்கப்பட்டு வாடிக்கையாளர்களுக்கு மேம்படுத்தப்பட்ட சேவைகளை வழங்கி வருகின்றன




TEJAS



தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களை பல்சேவை மையங்களாக்கும் திட்டத்தின் கீழ் 4 ஆண்டுகளில் 2841 சங்கங்களில் சுமார் ரூ.566 கோடி செலவில் வேளாண் இயந்திரங்கள் வாங்கப்பட்டு குறைந்த வாடகையில் விவசாயிகளின் பயன்பாட்டுக்கு வழங்கப்பட்டு வருகிறது.





சரக்குந்துகள் வாடகைக்கு விடுதல்,
பெட்ரோல், டீசல் சில்லறை விற்பனை நிலையங்கள்
நடத்துதல் என தொடக்க வேளாண்மை கூட்டுறவு
கடன் சங்கங்கள் மக்களுக்கு கூடுதல் சேவைகளை
வழங்கி வருகின்றன.


தமிழ்நாடு
கூட்டுறவு
கூட்டுறவுத் துறை
சேலம் மாவட்டம்
₹ 1,00,000/-

மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த கூட்டுறவு வங்கிகள் வட்டியில்லா கடனை வழங்கி வருகின்றன.

4 ஆண்டுகளில் 48,353 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.232 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

# பேரறிஞர் அண்ணா அவர்களை வாடிக்கையாளராகக் கொண்ட பெருமையைப் பெற்ற சின்ன காஞ்சிபுரம் நகர கூட்டுறவு வங்கி








தேசிய அளவில் சிறந்த வங்கியாக கோயம்புத்தூர் நகர கூட்டுறவு வங்கிக்கு நகர கூட்டுறவு வங்கிகளின் தேசிய இணையத்தால் விருது வழங்கப்பட்டது.

# நூற்றாண்டைக் கடந்து நிற்கும்
# இராஜபாளையம் பூபதிராஜூ நகரக் கூட்டுறவு வங்கி




**96 நகர கூட்டுறவு வங்கிகள் நூறாண்டுகளைக் கடந்து நகர்ப்புற ஏழை, எளிய மக்களுக்கு சேவையாற்றி வருகின்றன.**

நகரக் கூட்டுறவு வங்கிகள் சிறுவணிகக் கடன், சுய உதவிக்குழுக் கடன், நகைக்கடன், வீட்டு அடமானக் கடன் என 4 ஆண்டுகளில் 18,97,522 நபர்களுக்கு ரூ.24745/- கோடி கடன் வழங்கியுள்ளன.

# நவீனமயமாக்கப்பட்ட நகர கூட்டுறவு கடன் சங்கங்கள்











நகர கூட்டுறவு கடன் சங்கங்கள் நான்கு ஆண்டுகளில் 4,37,333 நபர்களுக்கு ரூ.7,633/- கோடி கடன்கள் வழங்கியதுடன் எளிய மக்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஊக்கப்படுத்தி ரூ.1974 கோடி வைப்புத் தொகையும் கொண்டுள்ளன.

நகர கூட்டுறவு கடன் சங்கங்கள் பொது சேவை மையங்கள், முதல்வர் மருந்தகங்கள், பன்நோக்கு அரங்கங்கள் என மக்களின் தினசரித் தேவைகளுக்கு ஏற்ப சேவையாற்றி வருகின்றன.

# புதிய சங்கங்களை உருவாக்குதல்



பலதரப்பட்ட தொழில்களை மேற்கொள்ளும் பிரிவினருக்கு அவர்கள் தொழில் சார்ந்த பொருட்களை தேசிய அளவில் சந்தைப்படுத்தவும் வங்கி சேவைகளை பெறவும் புதிய கூட்டுறவு சங்கங்கள் உருவாக்கி பதிவு செய்யப்பட்டுள்ளன. கடந்த 4 ஆண்டுகளில் 16 பல்நோக்கு கூட்டுறவு சங்கங்களும், மலைவாழ்மக்களுக்கு 13 பெரும்பலநோக்கு கூட்டுறவு சங்கங்களும் 12 மகளிர் சுய உதவிக்குழு கூட்டுறவு சங்கங்களும் 43 உழவர் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களும், 1 கோட்டூர் நரிகுறவர்கள் முன்னேற்ற கூட்டுறவு சங்கமும் உருவாக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

# பணியாளர்கள் கூட்டுறவு சிக்கனம் மற்றும் நாணயச் சங்கம்



1695 பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கங்கள் ரூ.5813/- கோடி உறுப்பினர் சேமிப்பை பெற்றும், நான்கு ஆண்டுகளில் ரூ.44683/- கோடி கடன் வழங்கியும் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட உறுப்பினர்களுக்கு சிறப்பாக சேவையாற்றி வருகின்றன.

## தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி




## நவீன மயமாக்கப்பட்ட திருச்செந்தூர் தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி



தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் பொதுமக்களிடம் இருந்து ரூ.163/- கோடி வைப்புத்தொகையைப் பெற்றும் நான்கு ஆண்டுகளில் 8,97,593 நபர்களுக்கு ரூ.5768/- கோடி கடன் வழங்கியும் கிராமப்புற பொருளாதார மேம்பாட்டிற்கு பெரிதும் உதவி வருகின்றன.




பெரியநாயக்கன் பாளையம் தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகத்தால் (NCDC) சிறந்த வங்கி என தெரிவு செய்யப்பட்டு, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களால் பரிசு வழங்கப்பட்டது.

**தொடர்ந்து 4 ஆண்டுகளாக 23 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளும் ரூ.1289 கோடி நிகர லாபத்தில் செயல்பட்டு 73,21,251 பயனாளிகளுக்கு ரூ.67,331 கோடி அளவிற்கு கடன் வழங்கியுள்ளன.**


சிவகங்கை மாவட்டம்
புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா, முடிவுற்ற திட்டப்பணிகள் திறப்பு விழா
அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா
தலைமை

ஆதரவற்ற பெண்களின் பொருளாதார நிலையை உயர்த்த 4 ஆண்டுகளில் மத்திய கூட்டுறவு வங்கிகள் 19,869 பெண்களுக்கு ரூ.65 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது

# நடமாடும் தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் (ATM)



வாடிக்கையாளர்களின் இருப்பிடத்திற்கு அருகிலேயே வங்கிச் சேவைகள் 34 நடமாடும் வங்கிகள் வாயிலாக வழங்கப்படுகின்றன.

# தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் (ATM)




4 ஆண்டுகளில் 60 தானியங்கி பணம் வழங்கும் இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன.

# "கலைஞர் கனவு இல்லம்" திட்டக் கடன்



"கலைஞர் கனவு இல்லம்" திட்டத்தின் கீழ் 2576 பயனாளிகளுக்கு ரூ.25 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

# "தமிழ் மகள்" திட்டம்



கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டப் பயனாளிகளிடையே சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க சுமார் 23,000 "தமிழ் மகள்" சிறப்பு தொடர் வைப்புக் கணக்குகள் கூடுதலாக 0.5% வட்டி விகிதத்தில் துவங்கப்பட்டுள்ளது.

# "தமிழ்ப் புதல்வன்" திட்டம்



அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் உயர் கல்வியை உறுதி செய்யும் நோக்கில் தொடங்கப்பட்ட "தமிழ்ப் புதல்வன்" திட்டப் பயனாளிகளுக்கு 40,047 சேமிப்புக் கணக்குகள் துவங்கப்பட்டுள்ளன.

# பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக்கான கடன்கள்



**பிற்படுத்தப்பட்ட பிரிவினரின் பொருளாதார நிலையை மேம்படுத்த 4 ஆண்டுகளில் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் சுமார் 51,000 நபர்களுக்கு ரூ.390 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.**

# சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக்கான கடன்கள்



**சிறுபான்மை சமூகத்தினரின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் பொருட்டு 4 ஆண்டுகளில் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் சுமார் 28,000 நபர்களுக்கு ரூ.224 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.**

# நாட்டுப்புற கலைஞர்களுக்கான கடன்



கொரானா காலங்களில் நாட்டுப்புற கலைஞர்களின் வாழ்வாதார நிலை பாதிக்கப்பட்டிருந்ததை கருத்தில் கொண்டு நிதி மற்றும் மின்னணு பணப்பரிவர்த்தனை (FDLC) பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகளிலும், உறுப்பினர் கல்வி திட்ட நிகழ்ச்சிகளிலும் வாய்ப்பளித்து, அக்கலைஞர்களின் வாழ்வாதரத்திற்கு கூட்டுறவு வங்கிகள் பெரிதும் உதவி செய்தன. கடந்த 4 ஆண்டுகளில் நாட்டுப்புற கலைஞர்களுக்கு ரூ.18.80 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

# 'சிறகுகள்' சிறப்புக்கடன் திட்டம்



**மாற்றுப் பாலினத்தவருக்கும் சமூக நீதியை உறுதி செய்ய "சிறகுகள்" சிறப்புக்கடன் திட்டத்தின் கீழ் 105 மாற்றுப் பாலினத்தவருக்கு ரூ.86 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.**

# தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி



121 ஆண்டுகளாக தொடர்ந்து நிகர லாபம் ஈட்டி வரும் தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி 933 கிளைகளைக் கொண்ட 23 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் 225 கிளைகளைக் கொண்ட 4456 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களின் வணிக நடவடிக்கைகளுக்கு ஆதாரமாக செயல்பட்டு வருகிறது.


SIVABALAN
KULAVILAKKAMMAN
SRI MURUGAN THUNAI
ASHOK LEYLAND
TN50 H 7577


TANFED
SPEED 50
iQOO Z9
02/21/2025, 15:32

# வேளாண் இடு பொருட்கள் விற்பனை

கடந்த 4 ஆண்டுகளில் 17,92,606 மெ.டன் உரங்களை விவசாயிகளுக்கு மானிய விலையில் கூட்டுறவு அமைப்புகள் விநியோகம் செய்துள்ளன.

52,024 மெ.டன் பாமினி கலப்பு உரம் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு நியாயமான விலையில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டம் எரியோடு அலகு வாயிலாக 95,060 லி உயிர் உரமும் 1193 மெ.டன் நுண்ணூட்டக் கலவையும் தயாரிக்கப்பட்டு மிகக்குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.









# இடைத்தரகர்கள் இன்றி இடையறாத சேவை



**வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கங்கள் மூலம் 4 ஆண்டுகளில் ரூ.3835 கோடி மதிப்புள்ள வேளாண் விளைபொருட்களை இடைத்தரகர்கள் இன்றி சந்தைப்படுத்தி விவசாயிகள் தங்கள் விளைபொருட்களுக்கு சரியான விலையைப் (Remunerative Rate) பெற்றுள்ளனர்.**


ORILAND
Pepper



கொல்லிமலை பெரும்பலநோக்கு கூட்டுறவு சங்கம் சிறு குறு விவசாயிகளிடமிருந்து மிளகு மற்றும் காப்பிக் கொட்டையை கொள்முதல் செய்து மதிப்பு கூட்டி 'ஓரிலேண்ட்' என்ற பெயரில் கூட்டுறவு அங்காடிகள் மற்றும் நியாய விலைக்கடைகள் வாயிலாக மிகக் குறைந்த விலையில் விற்பனை செய்து வருகிறது.



# தானிய ஈட்டுக் கடன்

கடந்த 4 ஆண்டுகளில் விவசாயிகளின் 1,74,115 மெ.டன் விளைபொருட்களை நல்ல விலை கிடைக்கும் காலம் வரை கூட்டுறவு அமைப்புகளின் கிடங்குகளில் வாடகைக்கு இருப்பு வைத்து பயனடைந்துள்ளனர்.

கூட்டுறவு அமைப்புகள் கடந்த 4 ஆண்டுகளில் ரூ.1,296 கோடி மதிப்புடைய 3,33,271 மெ.டன் விளைபொருட்களுக்கு ரூ.760 கோடி தானிய ஈட்டுக் கடன் விவசாயிகளுக்கு வழங்கியுள்ளன.

# வேளாண் விளைப்பொருட்களை மதிப்பு கூட்டுதல்







**நான்கு
ஆண்டுகளில்
மதிப்புக்கூட்டப்பட்ட
விளைபொருட்கள்
ரூ.425 கோடி**





# நுகர்வோர் நலனில் கூட்டுறவு









விளைபொருட்களை நேரிடையாக விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்து மதிப்புக்கூட்டி பல்வேறு வர்த்தக பெயர்களில் மக்களை ஈர்க்கும் வண்ணம் கூட்டுறவு அமைப்புகள் 4 ஆண்டுகளில் ரூ.130.48 கோடி அளவில் விற்பனை செய்துள்ளன.

| சங்கத்தின் பெயர் | வர்த்தகப் பெயர் |
|---|---|
| பெருந்துறை | பசுமை |
| திருச்செங்கோடு | அர்த்தநாரிஸ்வரா |
| சிதம்பரம் | தில்லை நடராஜா |
| சைதைப்பேட்டை | மருதம் |
| பொள்ளாச்சி | ஆழியார் |
| திண்டுக்கல் | பத்மகிரிஸ்வரர் |

| சங்கத்தின் பெயர் | வர்த்தகப் பெயர் |
|---|---|
| சேலம் | அமிர்தம் |
| பரமக்குடி | வைகை |
| பழனி | முருகா |
| பண்ருட்டி | திருஅதிகை |
| டியூகாஸ் | அசோகா |

# சிறப்பு வகை சங்கங்கள்



# துடியலூர் கூட்டுறவு சேவா சங்கம்

பயிர்க் கடன் முதலான பல்வேறு கடன் வகைகள் மட்டுமின்றி விதை, உரம், பூச்சிக்கொல்லி, நுண்ணூட்டச் சத்துகலவை மற்றும் வேளாண் கருவிகளை விவசாயிகளுக்கு விற்பனை செய்தும் பெட்ரோல் விற்பனை நிலையம், சிறப்பங்காடி போன்ற நுகர்வோர் சேவையாற்றியும் நான்காண்டுகளில் ரூ.1824 கோடி வர்த்தகம் செய்துள்ளது.





கன்னியாகுமரி மாவட்டம் அருமனை ரப்பர் வளர்ப்போர் கூட்டுறவு விற்பனை சங்கம் இயற்கை முறையில் பதனிடப்பட்ட இரப்பர் பொருட்களை தயாரித்து சந்தைப்படுத்தி வருகிறது.

# வேர்கள் மற்றும் விழுதுகள்



கூட்டுறவுச் சங்கங்களுக்கு வேர்கள் போன்று
ஆதாரமாக இருக்கும் உறுப்பினர்கள் மற்றும்
அவர்தம் குடும்பத்தினரின் நலன் பேணும் வகையில்
நலநிதி உருவாக்கப்பட்டு
"வேர்கள்" திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

கூட்டுறவுச் சங்கங்களை வலுப்படுத்தும் விழுதுகளாய்
திகழும் பணியாளர் மற்றும் அவர்தம் குடும்பத்தினர்
நலன் பேணும் வகையில் நல நிதி உருவாக்கப்பட்டு
"விழுதுகள்" திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

# மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை






**45 நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் மூலம் ரூ.5161.61 கோடி மதிப்பிற்கும், 320 தொடக்க கூட்டுறவு பண்டகசாலைகள் மூலம் ரூ.1245.7 கோடி மதிப்பிற்கும் நுகர்பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.**




அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்விலிருந்து ஏழை எளிய மக்களை பாதுகாக்க வெங்காயம், தக்காளி, உள்ளிட்ட 1703 மெட்ரிக் டன் காய்கறிகள் சந்தை மதிப்பைவிட குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.



**65 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் ரூ.138.64 கோடி மதிப்புள்ள 34,983 மெட்ரிக் டன் தரமான காய்கறிகள் நியாயமான விலையில் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.**

# கூட்டுறவு மேலாண்மை நிலையம்





கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் வாயிலாக
5,242 மாணவர்கள் பட்டயக் கல்வி
பயின்று வருகின்றனர்.

# கூட்டுறவு கல்வி




கூட்டுறவு கல்வி பயிலும் மாணவர்களுக்கு கூட்டுறவு செயல்பாடுகளைப் பற்றி களப்பயிற்சி அளிக்கப்படுகிறது.

# பணியாளர்களின் நலன்




பணியாளர்களின் ஆரோக்கியத்தை பேண மாவட்டந்தோறும் மருத்துவ முகாம்களும் புத்தாக்க பயிற்சிகளும் கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் மூலமாக மேற்கொள்ளப்பட்டன.

# புயல் பாதித்த மக்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் கூட்டுறவு வங்கிகள்



மிக்ஜாம் மற்றும் ஃபெஞ்சால் புயலால் பாதிக்கப்பட்ட
25,347 சிறு குறு மற்றும் நடைபாதை வியாபாரம்
செய்பவர்களுக்கு சிறு வணிக கடனாக
ரூ. 41.85 கோடி வழங்கப்பட்டுள்ளது.
மேலும் புயலால் பாதிக்கப்பட்ட
5,966 விவசாயிகளுக்கு கால்நடை வளர்ப்பு கடனாக
ரூ. 26.02 கோடி வழங்கப்பட்டது.

# சுற்றுப்புறசூழல் பாதுகாப்பில் கூட்டுறவின் பணி





சுற்றுப்புறசூழலை பாதுகாக்க கூட்டுறவு சங்கங்கள் மரக்கன்றுகளை நடவு செய்து, மழை வளம் கிடைக்கவும், மண்ணின் வளத்தை மேம்படுத்தவும் கால மாற்றத்தினால் ஏற்படும் வெப்ப நிலை மாற்றத்தை சீர் படுத்தவும் உதவி வருகின்றன.

# கூட்டுறவின் பெருமைகளை வெளிப்படுத்தும் அலங்கார ஊர்தி






# மக்கள் சேவையில் கூட்டுறவு!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் சீரிய தலைமையில், நான்கு ஆண்டுகளில், தமிழக அரசு ஏழை, எளிய மற்றும் சாதாரண மக்களின் நலனை முன்னிலையாகக் கொண்டு பல்வேறு முக்கியமான நலத்திட்டங்களை நடைமுறைக்கு கொண்டு வந்துள்ளது. இந்தப் பல்வேறு திட்டங்கள், தமிழகத்தின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் பங்கு வகித்து, மக்களின் வாழ்வாதாரத்தில் மாறுதல்களை கொண்டு வந்துள்ளது.

கல்வி, மருத்துவம், விவசாயம், பெண்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலனுக்கென அரசு பல்வேறு திட்டங்களை தொடங்கியுள்ளது. குறிப்பாக, ஏழை மக்களுக்கான கூட்டுறவு நிறுவனங்களில் வாங்கிய நகைக்கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டதுடன், மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கான கடன்களும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. விவசாயிகள் மற்றும் பயிர்க்கடன் பெறுபவர்களுக்கு, குறைந்த வட்டியில் கடன் வழங்கப்பட்டு, நேரத்தில் கடனை திருப்பி செலுத்தும் விவசாயிகளின் வட்டியை அரசே ஏற்கின்றது.

மாற்றுத்திறனாளிகளுக்காக வட்டியில்லாக் கடன், சமூகத்தில் விளிம்பு நிலையில் உள்ள மாற்றுப்பாலினத்தவருக்கு மிக குறைந்த வட்டியில் கடன் பெற 'சிறகுகள்' சிறப்புக்கடன் திட்டம், தரமான மருந்துகளை குறைவான விலையில் ஏழை, எளிய மக்களுக்கு அளிக்க 1000 முதல்வர் மருந்தகங்கள் என முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் கீழ், கூட்டுறவுத்துறை முன்னேற்றப் பாதையில் பயணித்து வருகிறது.

**திரு.கேஆர்.பெரியகருப்பன்**
**கூட்டுறவுத்துறை அமைச்சர்**

# கூட்டுறவு கொள்கைகள்

- தன்னிச்சையாக தடையின்றி உறுப்பினராகுதல்
- ஜனநாயக முறையில் நிருவாகம்
- உறுப்பினர்களின் பொருளாதார முன்னேற்றத்தில் பங்கு
- சுயாட்சியும் சுதந்திரமும்
- கூட்டுறவு கல்வி, பயிற்சி (ம) தகவல் தொடர்பு
- கூட்டுறவுகளிடையே கூட்டுறவு
- சமுதாய நலனில் ஈடுபாடு